முருகப்பெருமான் துணை

**மகான் ரோமரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.04.2024**, சனிக்கிழமை

1. அண்ணலே கலிவெல்லப் பிறந்த
   ஆறுமுக அரங்கமகா ஞானியே
   மண்ணுலகில் உன் அவதாரத்தால்
   மாற்றம் நிகழும் எனக்கூறி
2. கூறியே சோபகிருது சேல்திங்கள்
   குறைவிலா முப்பானோர் திகதி காரிவாரம்
   (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 31ம் நாள், 13.04.2024, சனிக்கிழமை)
   தெரிவிப்பேன் துல்லிய ஆசி
   தேசிகன் கேட்க ரோமரிஷி யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
   உலகை காக்கும் மகாசக்தியாக
   ஞானம் அருளும் அரங்கன் நெறி
   ஞானபண்டிதனே தந்த நெறியாம்
4. நெறிவழி கலிவாழ் மக்கள்
   நெஞ்சம் முழுக்க சரணாகதி
   அறியக் கொண்டு வருதலுற
   அரங்கன் மகிமை உணரப்பட்டு
5. உணரப்பட்டு வரும் நல்லுலகில்
   உண்மை குரு மெய்வழியென
   உணர்வுகள் பெருக இனிதே
   உயர்வுகளை அடைய நேரும்
6. நேருமையான வாழ்க்கை முறையும்
   நீதிகுன்றா செயல்பாடுகளாகி
   வறுமை வென்று வையகத்தை
   வாட்டி வதைக்கும் பசிப்பிணி விரட்டி
7. விரட்டியே தருமவான்களாகவும்
   வினவிட மாதருமம் செய்து
   சரணாகதி வழி சகலருமே
   சாற்றிடுவேன் நன்மை அடையக்கூடும்

8. கூடவே அரங்கமகா ஞானி
குருவழி கண்ட நன்மையை
நாடெங்கிலும் பரப்பி நின்று
நன்மைதனை மற்றவரும் உலகோரும்

9. உலகோரும் அடையவகை செய்ய
உலகினில் எங்கும் அரங்கன்ஞான
பலம் பெருகி கலியினில் மாற்றம்
பழுதின்றி நடந்தேறக் கூடும்

10. கூடவே உலகம் எங்கிலும்
குருவரங்கன் ஞானப்படைகள்
இடர்களை வெல்லும்படி பெருகி
இந்தஉலகம் ஞானவான்கள் ஆளுமை

11. ஆளுமை தனை அடைந்து
அழிவு பேரிடர் ஏதுமின்றி
வலுவான வளமான பூமியாக
வையகம் பாதுகாப்புதனை அடையும்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—